[31st March 1965

திட்டம் இல்லையா? அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கக்கூடாது என்ற பாலிசி இருக்கிறதா? இண்டஸ்டிரியல் பைனன்ஸ் பாலிசி என்ற முறையிலே கூட்டுறவுச் சங்கங்களில் சேராதவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டபொழுது, கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பவர்களுக்குத்தான் வீடுகட்டும் திட்டம் என்ற கொள்கை ஒத்துக் கொள்ளப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன மாறுதல் செய்யமுடியும் என்பதை இப்பொழுது சொல்வதற்கில்லை.

Industrial Estates in Private Sector

* 383 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Industries be pleased to state the nature of assistance given by the Government for the establishment of Industrial Estates in private sector?

THE HON. SRI R. VENKATARAMAN: The Government sanction loan equal to 80 per cent of the cost of the schemes after the Co-operative Societies or Companies establishing the Industrial Estates, raise a share capital equal to 20 per cent of the cost. The loan which is repayable in 15 years will bear interest at the rates to be fixed suitably in individual cases. Besides the free services of an Administrative Officer for each of the Estates will be sanctioned for an initial period of 3 years.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தனியார்களால் நடத்தப்படுகின்ற தொழில் பேட்டைகளுக்கு 80 சதவிகிதம் கடன் உதவி அளிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் துறையிலேயே முழுத் தொகையையும் போட்டு ஏற்பாடு செய்தால் என்ன என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இரண்டு துறையிலும் செய்கிறோம். சர்க்கார் துறையில்தான் ஏராளமான தொழில் பேட்டைகள் செயல்படுகின்றன. அத்துடன் கூட்டுறவுத் துறையுடனும் சேர்ந்து செய்கிறோம். அதற்குக் காரணம் என்னவென்றால் யார் யார் தொழில் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் ஒன்று சேர்ந்து தொழில்பேட்டைகள் ஆரம்பிப்பதற்கு முன்வருவார்கள் என்பது தான். அப்பொழுதுதான் தொழில் பேட்டை கட்டி முடிக்கப்பட்ட பிறகு அது யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை வராது.

MR. SPEAKER: I think the hon member wants to know why hundred per cent loan should not be given. Anyway, the hon. member may repeat his question.

திரு. எம். வி. கரிவேங்கடம்: பூராத் தொகையும் அரசாங்கமே போட்டு அரசாங்கத் துறையிலே என் நடத்தக்கூடாது என்பது தான் என்னுடைய கேள்வி. எத்தனை தொழில் பேட்டைகள் இருக்கின்றன என்பதையும் அறியலாமா?

MR. SPEAKER: The Hon. Minister has already answered that question

31st March 1965]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் எவ்வளவு தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கோவாபரேடிவ் இண்டஸ்ரியல் எஸ்டேட், தூத்துக்குடி முடியும் தறுவாயில் இருக்கிறது. கோவாப்பரேடிவ் இண்டஸ்டிரியல் எஸ்டேட், சிவகாசி பாதி வேலை நடந்துகொண்டு இருக்கிறது. கோவாப்பரேடிவ் இண்டஸ்டிரியல் எஸ்டேட், பொள்ளாச்சி-உடுமலைப்பேட்டை வேலை நடந்து கொண்டிருக்கிறது. வியாசர்பாடியில் 20, 30 யூனிட்டுகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. கோவாப்பரேடிவ் ஆட்டோமோபைல் பார்ட்ஸ் இண்டஸ்டரி, ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. கே. ஆர். சுந்தரம் இண்டஸ்ரியல் எஸ்டேட் வேலை துவங்கி விட்டது. கோயம்புத்தூர் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் சில யூனிட்டுகள் வேலை ஆரம்பமாகும் தறுவாயில் இருக்கின்றன. செல்ப் ஹெல்ப் இண்டஸ்டிரியல் எஸ்டேட், வேலச்சேரி ஆரம்பமாகும் நிலையில் இருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு தாலுகாவினுடைய தலைநகரிலேயும் சிறிய சிறிய தொழில் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகையால் இந்தத் தொழிற் பேட்டைகளைத் தாலுகாத் தலைநகரிலே ஏற்படுத்த வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் நோக்கமும் கூட. அதன்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமென்று பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தாலுகாத் தலைநகர்களிலே தொழில் பேட்டைகள் அமைப்பதற்குப் பதிலாக அந்தந்தத் தாலுகாக்களிலுள்ள கிராமங்களிலே தொழில்பேட்டைகள் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு அமைப்பதின் மூலம் தொழில் வளம் சரியாக இருக்குமா என்பது சந்தேகம். தாலுகாக்களே பின் தங்கிய பகுதிகள்தான். அதற்கும் பின் தங்கிய பகுதிகளாகிய கிராமங்களில் தொழில்பேட்டைகள் ஆரம்பிப்பது அவ்வளவு நல்லதாக இருக்காது.

திரு. முனு. ஆதி : இந்தத் தொழில் பேட்டைகள் நடத்துவதிலே தனியார் துறையிலே நடத்தப்படுகின்ற தொழிலிலே அதிகப் பலன் கிடைக்கிறதா ? அல்லது பொதுத் துறையிலே அதிகப் பலன் கிடைக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவரவர் கருத்துப் பிரகாரம் பிரச்சாரம் செய்கிறார்கள், சர்க்காரைப் பொறுத்தவரையில் நாம் வைத்திருக்கிற தொழில்பேட்டைகள் திறமையாக நடக்கின்றன என்று எல்லோரும் சொல்கிறார்கள்.

திரு. கோ. சி. மணி : மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் தஞ்சை மாவட்டத்தில் ஒரு தொழில்பேட்டை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது தஞ்சையிலே தொழிற்பேட்டை நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு மேற்கொண்டு ஆரம்பிக்க முடியுமா என்பதெல்லாம் இப்பொழுது சொல்வதற்கு இல்லை.

திரு. ம. கமலநாதன் : கிருஷ்ணகிரியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தொழில் பேட்டையிலே தொழில் ஆரம்பிக்க அநேகமாக யாரும் முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? 18 யூனிட்களிலே, 5 பேர்கள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன் வந்திருக்கிருர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எனக்கு வந்திருக்கின்ற தகவல் முற்றிலும் மாருக இருக்கிறது. ஃபங்ஷனல் இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் புருட் புராஸஸிங் ஆரம்பிக்க வேண்டுமென்று பலர் வந்து அந்த இடத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : சேலம் ஜில்லாவிலே ஒரு தொழில் பேட்டை ஆரம்பிக்க உத்தேசம் இருந்தது. ஆனல் நில ஆர்ஜிதம் செய்யமுடியாமல் இருந்தது. அதைப்பற்றி உயர்நீதி மன்றத்திற்கு வழக்குச் சென்றது. ஆகவே, வேறு யாரிடமிருந்தாவது இடத்தை விலைக்கு வாங்கி அந்த இடத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தத் தொழிற்பேட்டை ஹைகோர்ட்டில் தொக்கிக்கொண்டிருக்கிறது. இதுவரையில் 2, 3 இடங்கள் சேலத்திலே வாங்குவதற்கு முயற்சி செய்தோம். ஆனல் அங்கு இருக்கிற மக்கள், தங்களுக்கு இருக்கின்ற நிலம் போகாமல் தொழில்பேட்டை நடத்திஞல் நல்லது என்று நினைக்கிருர்கள். அந்த வித்தையைச் செய்ய எங்களால் முடியவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நீலகிரி ஜில்லாவிலே ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க அமைச்சரவர்கள் அனுமதி அளிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் முடிவெடுக்கவில்லை என்று சொன்னேன்.

* 384 *Q.*—Sri M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of employees in Industrial Estates at Ambattur and Guindy?

The Hon. Sri R. VENKATARAMAN :

4,349 – at Industrial Estate, Guindy.

2,114 – at Industrial Estate, Ambathur.

This refers to direct employment and not to secondary and tertiary employment.